முருகப்பெருமான் துணை

**மகான் சகாதேவன் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.09.2022**, வெள்ளிக்கிழமை

1. ஞான சொரூப மாதவ ராஜனே
ஞானிகளை கலியிலும் படைக்க
ஞானபண்டிதன் அவதாரமாக வந்த
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது யாளி திங்கள்
குறைவிலா அறுநான்கு திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 24 நாள், 09.09.2022 வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு சகாதேவன் யானும்
3. யானும் ஞானலோகம் அமைய உரைப்பேன்
உயர்தரும ஞானி அரங்கனின்
ஞானமே உலகை வெல்லும்
ஞானவான்களை படைத்தருளும்
4. அருளவே அரங்கன் தரும நெறி
ஆற்றல்கூட்டி மக்களை தேற்றி
அருளெனும் சுத்த சன்மார்க்கம்
அறநெறி பிசகா கடைபிடிக்கச் செய்து
5. செய்துமே உயர்வழி காட்டும்
சேவைவழி ஈடுபாடு தன்னை
மெய்யுடனே அனைவரும் பின்பற்ற
மேலான உறுதிதனை தந்து காக்கும்
6. காக்கவே தருமமும் சன்மார்க்கமுமாக
கண்களாக மக்களிடை ஒன்றி
ஊக்கமும் நல்ல ஆக்கமும் தந்து
உயரவே பேரற்புதம் காட்டும்
7. காட்டுமே அரங்கமகா ஞானி
கடைக்கண் பார்வை பெற்ற மக்களெல்லாம்
வாட்டம் விலகி ஞானிகளெனும்
வல்லமை கண்டு தேறக் கூடும்
8. கூடவே ஆறுமுகனார் சக்தியான
குருவரங்கமகான் மகிமைதனை
நாடெங்கிலும் உள்ள மக்கள்
ஞானதேசிகன் சீடர்களாகி இனிதே
9. இனிதே தேசமெல்லாம் பரப்பிட
எல்லாத் திக்கிலும் ஞானபலம்
கனிவேலன் அருளும் ஆசியுமாகி
கலியுகமக்களெல்லாம் ஞானிகளாகி

10. ஆகியே உலக மாற்றமாக
ஆளுமையும் ஞானவான்கள் நிறைந்த
அகிலமே ஞான ஆட்சிதனை
அடைந்துமே அமைதியும் பாதுகாப்பும்

11. காப்பான சமூகச் சூழலும்
கலியிடரை வெல்லும் ஞானபலமும்
மூப்பில்லா நரைதிரை ஏதுமில்லா
முழுமைபெற்ற மக்களாக உலகோர் மாறுவர்
அருளாசி முற்றே

–சுபம்–